செய்தி வெளியீடு எண் : 1512 நாள் : 01.09.2022

# செய்தி வெளியீடு

## தமிழக மாவட்டங்களில் வெள்ள அபாயம் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை பயிற்சி

தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் இணைந்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பிற அரசுத் துறை அலுவலர்களுக்கு வெள்ள அபாயம் குறித்து விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை பயிற்சி இன்று (01.09.2022) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

இந்த ஒத்திகை பயிற்சியின் ஒரு அங்கமாக, இன்று காலை மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் வெள்ள அபாயம் குறித்த எச்சரிக்கை VHF தொலைத்தொடர்பு கருவிகள் மூலமாக வெள்ள அபாய எச்சரிக்கை வரப்பெற்றவுடன் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, மீட்பு படையின் உதவியுடன் மாவட்ட நிருவாகம் ஒருங்கிணைந்து பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

பின்னர் வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட மக்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு அங்கு தயாராக இருந் ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த ஒத்திகை பயிற்சியின் மூலம் மாநில மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் காலங்களில் இணைந்து செயல்படும் முக்கிய

துறைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களின் தயார் நிலை மதிப்பீடு செய்யப்பட்டதோடு, பேரிடர் நிகழ்வு, மீட்பு அமைப்பின் செயல்பாடுகள், (Incident Response System) என்பது ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஒத்திகை பயிற்சி மாநில மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் மற்றும் பல்வேறு அவசர நிகழ்வுகளின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை, மீட்பு, தேடல் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் தேவையான, மனிதவளம், உபகரணங்கள், தகவல் தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் பேரிடர் மேலாண்மையில் முதல் நிலை மீட்பாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (NGOs) மற்றும் தன்னார்வலர்களது பங்கு ஆகியவற்றை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில், கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஒத்திகை பயிற்சியில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பிரிகேடியர் தாக்கர், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. சி.அ.ராமன், இ.ஆ.ப., தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினை சார்ந்த அலுவலர்களும் மற்றும் பேரிடர் மேலாண்மையில் பெரும் பங்கு வகிக்கும் முக்கிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in